## இயல் 2 செய்யுள்: முல்லைப்பாட்டு

விடையளி:

1. விரிச்சி என்றால் என்ன?

ஏதேனும் ஒரு செயல் நன்றாக முடியுமோ? முடியாதோ? என ஐயம் கொண்ட பெண்கள், மக்கள் நடமாட்டம் குறைவான ஊர்ப்பக்கத்தில் போய், தெய்வத்தைத் தொழுது நின்று அயலார் பேசும் சொல்லைக் கூர்ந்து கேட்பர். அவர்கள் நல்ல சொல்லைக் கூறின் தம் செயல் நன்மையில் முடியும் என்றும் தீய மொழியைக் கூறின் தீதாய் முடியும் என்றும் கொள்வர்.

2. முல்லைப்பாட்டு – நூல்வெளி குறித்து விளக்குக:

- முல்லைப்பாட்டு, பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று.
- 103 அடிகளைக் கொண்டது.
- ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டது. முல்லை நிலத்தைப் பற்றிப் பாடப்பட்டது.
- பத்துப்பாட்டில் குறைந்த அடிகளை உடைய நூல்.
- இதை இயற்றியவர் காவிரிப் பூம்பட்டினத்துப் பொன்வணிகனார் மகனார் நப்பூதனார்.

3. முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக. ** (அல்லது)

தலைவன் வருகை குறித்து முதுபெண்டிர் விரிச்சி கேட்டு நிற்றலும், ஆற்றுப்படுத்துதலும் பற்றி முல்லைப்பாட்டின் வழி விளக்குக:

- உலகத்தை வளைத்துப் பெருமழை பொழிகிறது. வலம்புரிச்சங்கு பொறித்த கைகளையுடைய திருமால், மாவலி மன்னன் நீர் வார்த்துத் தரும்பொழுது, மண்ணுக்கும் விண்ணுக்குமாகப் பேருருவம் எடுத்து உயர்ந்து நிற்பது

போன்றுள்ளது மழைமேகம்.

- அம்மேகம், கடலின் குளிர்நீரைப் பருகிப் பெருந்தோற்றத்துடன் வலமாய் எழுந்து, மலையைச் சூழ்ந்து, பெருமழையைப் பொழிகிறது.

- துன்பத்தைச் செய்கின்ற அம்மாலைப்பொழுதில், முதிய பெண்கள் மிகுந்த காவலையுடைய ஊர்ப்பக்கம் சென்றனர். மலர்ந்த முல்லைப் பூக்களோடு நாழியில் நெல்லையும் சேர்த்துத் தெய்வத்தின் முன் தூவினர். தெய்வத்தைத் தொழுது, தலைவிக்காக நற்சொல் கேட்டு நின்றனர்.

- அங்கு, சிறு தாம்புக் கயிற்றால் கட்டப்பட்ட இளங்கன்று பசியுடன் இருந்ததைக் கண்ட இடைமகள் "புல்லை மேய்ந்து உன் தாய் இடையர் ஓட்டிவர இப்போது வந்து விடுவர், வருந்தாதே" என்றாள்.

- இது நல்ல சொல் எனக்கொண்டு முதுபெண்கள் தலைவியிடம் நற்சொல்லை நாங்கள் கேட்டோம். நின் தலைவன் பகைவரை வென்று திரைப்பொருளோடு வருவது உறுதி.

- தலைவியே! மனத்தடுமாற்றம் கொள்ளாதே! என ஆற்றுப்படுத்தினர் முதுபெண்டிர்.

4. முல்லைப்பாட்டில் இடம்பெற்றுள்ள முதல் கரு உரிப்பொருள்கள் குறித்து விளக்குக.

